بسم الله الرحمن الرحيم



# A WAY TO THE TRUTH

**“அல்லாஹ் (வேதத்தையுடைவர்களிடத்தில்) எல்லா நபிமார்கள் மூலமும் உறுதிமொழி வாங்கிய நேரத்தையும் நினைத்து பாருங்கள்” வேதம் ஞானம் ஆகியவற்றில் இருந்து நான் உங்களுக்கு கொடுத்துவிட்டு பின்னர், உங்களிடம் உள்ளது மெய்பிக்க கூடிய ஒரு தூதர் உங்களிடம் வந்தால் அவரிடம் நீங்கள் நம்பிக்கை கொண்டே ஆக வேண்டும். இன்னும் அவருக்கு உதவிசெய்ய வேண்டும். மேலும், நீங்கள் ஒப்புக்கொண்டு என் பொறுப்பை ஏற்று கொண்டீர்களா என்று அவன் கூறியதற்கு ஆம்! நாங்கள் ஒப்புக்கொண்டோம் என்று அவர்கள் கூறினார்கள் இப்பொழுது, நீங்கள் சாட்சியாக இருங்கள். உங்களுக்கு சாட்சிகளில் ஒரு சாட்சியாக நானும் இருக்கிறேன் என்றார் (3-82).**

**நாம் நபிமார்கள் எல்லாரிடத்திலும் உம்மிடத்தும் நூகு இப்ராகீம் மூஸா மரியமுடைய மகன் இசா ஆகியோரிடத்தும் உடன்படிக்கை செய்த நேரத்தை நினைத்து பாரும். நாம் அவர்கள் எல்லாரிடமும் உறுதிவாய்ந்த உடன்படிக்கை ஒன்று வாங்கினோம் (33;8).**

நபி(ஸ) அவர்களில் இருந்து இறைவன் வாங்கிய உடன்படிக்கை அன்னாருடைய சமுதாயத்தில் இருந்து இஸ்லாம் மதத்தை சீர்திருத்துவதற்காக ஒவ்வொரு நூற்றாண்டிலும் வருகின்ற முஜத்தித்துகளை பற்றியதாகும் என்பது ஒரு உண்மையே. திரு நபி (ஸ) கூறியிருப்பதாக அபுதாவூதில் வந்துள்ள ஒரு ஹதீஸ் இவ்வாறாகும்.

**இந்த சமுதாயத்தில் ஒவ்வொரு நூற்றாண்டின் தலைப்பிலும், மதசீர்திருத்ததிற்காக நிச்சயமாகவும் அல்லா முஜத்திதுமார்களை அனுப்பிவைப்பான் (அபுதாவூத்)**

பிரியமானவர்களே, நாம் இப்போது ஹிஜ்ரா 15-ம் நூற்றாண்டில் வாழ்ந்துக்கொண்டிருக்கிறோம். மேற்கூறிய பரிசுத்த குர் ஆன் வசனத்தின் அடிப்படையிலும் திருநபி(ஸ) அவர்களின் திருமொழிகளின் அடிப்படையிலும் இஸ்லாம் மத சீர்த்திருத்ததிற்காக அல்லாஹ் 1-ம் நூற்றாண்டு முதல் ஒவ்வொரு நூற்றாண்டிலும் முஜத்தீதுகளை அனுப்பிவைத்ததாக வரலாறு கூறுகின்றது.

1-ம் நூற்றாண்டில் ஹஸ்ரத் உமர்இப்னு அப்துல் அஸீசும், இரண்டாம் நூற்றாண்டில் இமம்ஷாபியும், மூன்றாம் நூற்றாண்டில் அப்துல் கஸன் அஷ் அரியும் நான்காம் நூற்றாண்டில் அபூஉபைதுல்லா நிஷாபூரியும், ஐந்தாம் நூற்றாண்டில் இமம்ஹசாயும், ஆறாம் நூற்றாண்டில் அப்துல் ஹாதர் ஜீலானியும், ஏழாம்நூற்றாண்டில் காஜாமூயினுதீன் சிஸ்தியும், எட்டாம் நூற்றாண்டில் ஹாபீஸ் இப்னுஹஜரில் அஸ்ஹலானியும், ஒன்பதாம் நூற்றாண்டில் இமம் ஜலாலுதீன்

சுயூத்தியும், பத்தாம் நூற்றாண்டில் இமாம் முஹம்மது தாஹீர் குஜராத்தியும், பதினொன்றாம் நூற்றாண்டில் முஜதீது அலப்ப சானியும், பனிரெண்டாம் நூற்றாண்டில் ஷாஹ்வலீயுல்லாஹ் முஹதித் தக்லவியும், பதிமூன்றாம் நூற்றாண்டில், ஷாஹித் செய்யது ஆஹமது பரோல்லபியும் பதினான்காம் நூற்றாண்டில் மிர்ஸாகுலாம் அஹமது அலைசலாமும் வந்த புனிதமான இஸ்லாமில் இந்த பதினைந்தாம் நூற்றாண்டிலும் ஒரு இறைதூதர் வரவேண்டும் அல்லவா? இறைவன் நபி(ஸ)க்கு கொடுத்த வாக்குறுதிக்கு மாறாக செயல்படுவான் என்பது ஒரு உண்மையான முஸ்லீமுக்கு நினைத்து பார்க்க இயலாத விஷயமாகும்.

அகிலமெல்லாம் அற்புதமாக படைத்து அதை அழகாக ஆட்சிசெய்யும் இறைவன் தனது வாக்குறுதியை அத்துமீறுவான் என்று, எந்த ஒரு உண்மையான முஸ்லீமும் ஏற்றுக்கொள்ளும் விஷயமல்லை. ஆகாயத்திலுள்ள விண்மீன்களெல்லாம் சிறுதூள்களாக்கி சிதறடிக்கப்பட்டாலும் சரி, சூரியன் கிழக்கில் இருந்து மேற்கு உதித்தாலும் சரி, பூமியே பிரளயம் வந்து கீழ் மேல் மறிக்கப்பட்டாலும் சரி, இந்த, வையத்திலுள்ள செடிக்கொடிகள், உயிரினங்கள் யாவும், மாய்ந்து மண்ணடிந்து போனாலும் சரி இறைவனுடைய வாக்குறுதிகள் அதுவும் அப்படியே முழுமையாக நடந்தே தீரும் என்பதில் எந்தவித ஐயவும் இல்லை.

பிரியமானவர்களே! இந்த பதினைந்தாம் நூற்றாண்டிலும் இறைவனால் அனுப்பப்பட்டிருக்கும் ஒரு தூதர் வந்திருக்கிறார். மௌரீசியஸ் நாட்டை சார்ந்த முனீர் அஹ்மது அஸீம் சாஹிப் ஆவார் அவர்.

அன்னார் உலகமக்களிடம் அறிவிக்கின்றார். **“எனக்கு பணமோ பதவியோ தேவையில்லை. மனிதகுலத்திற்கு எச்சரிக்கை செய்வதற்கு அல்லாஹ் என்னை அனுப்பி வைத்துள்ளான். அவனில் இருந்து கிடைக்கும் தூதுசெய்தியை நான் எட்ட வைக்கிறேன். நீங்கள் இதை ஏற்றுக்கொண்டால் இம்மையிலும், மறுமையிலும் உங்களுக்கு நிம்மதியும் சாந்தியும் கிடைக்கும். அல்லாஹ்வின் இச்செய்தியை புறக்கணித்தால், எனக்கும் உங்களுக்கும் இடையில் அவனே போதுமானவன். இன்று முதல் நான் இந்த நூற்றாண்டின் முஹைதீன் என்று இறைவன் சாட்சியாக கூறுகின்றேன்”.**

இறைவனால் அனுப்பப்படும் இமாம் மீது நம்பிக்கைக்கொண்டு அவருக்கு உதவிபுரிய வேண்டும் என்பது குர்-ஆன் (3:82) வசனத்தின் அடிப்படையிலும் ஒவ்வொரு முஸ்லீம் மக்களின் கடமையாகும். அவருக்கு அல்லாஹ்விடமிருந்து கிடைத்த அறிவிப்பையொட்டி அன்னார் தலைமையில் இயங்குகின்ற நம்பிக்கையாளர்களின் ஒரு சங்கமாகும். ஜமாத்துசஹீஹில் இஸ்லாம் இன்றர்னேஷ்னல். அதை பற்றிய அனைத்து விவரங்களுக்கும் அணுகுங்கள்.

Issued by R. Jamaludin Raother, Amir
Jamaat Ul Sahih Al Islam, Kerala (Regd) India.
Email: jamal.raother@gmail.com
Web: www.jamaat-ul-sahih-al-islam.com

Translated by
Azim Ahmad
*Sadr Sahibul Faraj*
Kerala/ TamilNadu

Phone: 09789180817, 09500762588, 09791691819, 09447001832